Registered as a News Paper in Ceylon

P. M. G- No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஹு (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது    தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - கூஎ]    யாழ்ப்பாணம்:- மன்மத ஹு ஆடி மீ உஎ உ வெள்ளிக்கிழமை (12 AUGUST. 1955)    [இல - கக

## எல்லாம் இரகசியம்

—:0:—

### முப்பொருள் அறிவே மெய்யறிவாகும்

ஒருவன் தன்னைப்பற்றியும் தான் வாழ்தற்கிடமான இந்த உலகத்தைப் பற்றியும், தன்னையும் இவ்வுலகத்தையும் உடைய தலைவனைப்பற்றியும் அறிந்துகொள்ளாத அறிவு மெய்யறிவெனப்படாது. சமயவாராய்ச்சிக் கண் சிறந்து திறபன கடவுள் ஆன்மா, உலகம் என்னும் இம் முப்பொருள்களே. இம் மூப்பொருள்களுள்ளே எல்லாம் அடங்குமென்க.


ஆண்டவனே! இந்தப் பிரமாண்டமான உலகத்தைச் சிருட்டிசெய்துவிட்டு இன்று நீ எங்கிருக்கிறாய்? இந்த உலகங்கொண்டுள்ள அதி அற்புத சிருட்டித் தன்மைகளை அறிந்துரைக்க வல்லவன் நீயொருவனேயன்றி வேறு யாவரால்தான் முற்றவும் அறிந்துசொல்லமுடியும். உற்று நோக்குவார்க்கு உன்னை அறிய அறிய உன்னைப் பற்றிய விஷயங்கள் பல அறியப்படாத இரகசியமாக இருத்தல்போல உனது படைப்புப் பொருளான இவ்வுலகத்தைப் பற்றிய விஷயங்களும் பல அறியப்படாத இரகசியமாகவே இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் வெற்றெனத் தோன்றும் விஷயங்களல்ல. "விரைவாய்ப் பார்க்கிற் றெரியா தொன்றும் விரையாதேற்கிற் கருகாதென்க" ஒரு ஒருவனது இவ்வுலகவாழ்வில் அவனது அநுபவத்திற் சந்திக்கும் பருப்பொருட்கள், விஷயப் பொருட்களெல்லாம் அநேகமாய் மறைவு பட்டனவாய்த் தான் இருக்கின்றன. அதாவது இரகசியமானவையாய்த்தான் இருக்கின்றன என்றே தோன்றுகின்றன. அவற்றைச் செவ்வனே அறிந்துகொள்ள நம்மறிவிற்கு ஆற்றலோ நிறைவோ இல்லாமைகாரணமாக அவை இரகசியமாகவும் தோன்றலாம். அவைதான் எவ்வாறு? இயற்கையின் விசித்திரம் வெகு மறைவாகவும் வெகு நுட்பமாகவும் இருக்கின்றதே. ஒருவனுக்கு நான் யார், நான் இங்கே பிறப்பதற்கு முன் எங்கே இருந்தேன்? இனிமேல் எங்கேயாகிலும் போக வேண்டுமா? எங்கே போவது? ஏன் போவது? எப்போ போவது? அங்கே என்ன செய்வது? அது என்னது

— சிவதொண்டன் —

எண்ணப்படி நிகழ்வதா? அல்லது வேறு யாருடைய எண்ணப்படி நிகழ்வது? என்னுடம்பிலேதான என்னுயிர்எங்கேயிருக்கின்றது? அதன் நிறம் என்ன? வடிவம் என்ன? ஏன் நான் இந்தவுலகத்தில் ஒரு குபேர சம்பத்துடையவனாய் இருக்கப்படாது? இன்னோரன்ன விஷயங்களெல்லாம இரகசியமாகத்தானே இருக்கின்றன அல்லவா? ஏன் இந்த உலகத்தைத் தான் எடுத்துக்கொள்வோமே. நாம் பிறக்க எம்மை நிலம் தாங்கியது. காற்று சுவாசம் தந்தது தண்ணீர் தாகம் தீர்த்தது. சூரியன் ஒளி தந்தது. ஏன் இவையெல்லாம் நமக்கு இவ்வுபகாரத்தைச் செய்தன? யார் இவ்வாறு இவைகளை இவ்வுபகாரகங்களைச் செய்யும்படி செய்தார்? இவையெல்லாம் இயற்கை நிகழ்ச்சிகள் தான் என்போமோ? அதாவது அறிவு ஆற்றல் சிந்தனையுள்ள ஒரு வினைமுதல் வயப்பட்டு இவை தூண்டப்பெறாமல் தாமாகவே இவ்வுபகாரத்தைப் புரிகின்றன என்போமா? இவையெல்லாம் சடப்பொருள்கள்தானே. இவைகளுக்கு அறிவு ஆற்றல் உணர்ச்சி ஏது? அவற்றுக்கு உபகாரம் எவ்வாறு விளங்கும்? ஒருவன் பிறக்கின்றான். இளைஞனாகிப் பின் முதியனாய் ஆகிவிடுகின்றான். அவன் தனது அனுபவசாதகிய எல்லைக்குள்ளே தான் வழக்கமாகப் பயணஞ் செய்யும் ஒரு தெருவின் இரு மருங்கும் தந்தித்தூண்கள் நிறுவப்பட்டிருப்பதைக் காண்கின்றான். (இத் தூண்கள் அவன் பிறப்பதற்கு முன்னரே நாட்டப்பட்டவைகள்) இவை நாட்டப்பட்டமை அவன் காலத்திலே நிகழாத விஷயமானமையால் அவனுக்கு அவைகளின் தோற்றம் விளங்கவில்லை. அதனால் அவன் மழைக்குக் காளான்கள் தோன்றியவாறுபோல் இவைகளும் தாமாகவே தோன்றியவை. இவை ஒருகருத்தாவை உடையனவல்ல வென்று அவன் எண்ணுகின்றான். இவ்வெண்ணம் ஒரு போலி எண்ணம் என்க. அவ்வெண்ணம் போன்றதே இம்முடிபுகளும் என்க.

மேலே சுட்டிய நிலம், நீர், வாயு, வெயில் (தேயு) ஆகாயம் என்பனவாய பஞ்சபூதப் பொருள்கள் மனுஷன் முதலிய எல்லா சீவராசிகளினதும் உயிர் வாழ்வுக்கு இன்றியமையாத பொருள்களல்லவா? இவை அணுவணுவாகத்தானும் ஒவ்வொரு கணமேயும் உபகாரப்படுகின்றன அல்லவா? இவையெல்லாம் தம் புத்திகொண்டு இவ்வாறு உபகாரப்படுதற் பொருட்டாகத் தோன்றினவா? ஆகாயக கப்பல், மோட்டார் வண்டி

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)



நல்லூர் கந்தசுவாமிகோவில்தேர்

ஆடி 31உ (16-8-55) செவ்வாய்க்கிழமை

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் திருவிழா வென்றால் யாழ்ப்பாணச் சைவ மக்கள் வாழ்க்கையில் சிறப்பாகவும் ஈழச் சைவ மக்கள் வாழ்க்கையில் பொதுவாகவும் ஒரு மாற்றம். கந்தசுவாமி கோவிலுக்கு அணிமையில் உள்ள கிராமங்களில் வசிக்கும் சைவ மக்கள் வாழ்க்கையில் அது பெரும் மாற்றம். கோவிலுக் கணிமையில் வாழும் சைவ மக்கள் வாழ்க்கையில் மிகப் பெரும் மாற்றம். இத்தகைய மாற்றம் வாழ்நாள் முழுதும் தொடர்ந்து நிலைத்தாலோ என்று பலர் விரும்புவர். முருகப்பெருமானது திருவருள் அத்தகைய தூய அதிர்ச்சியை இந்நாட்களில் உண்டாக்குகின்றது.

இவ்வாறு அருள் வழங்கும் திருவிழா இவ்வாண்டு நிகழும் ஆடி மீ 8 உ ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் தொடங்கியது. வழக்கம் போல் நாள்தோறும் அடியார் கூட்டம் போவதும் வருவதுமாகவேயிருக்கின்றது. இக்கிழமை தேர்த் திருவிழாவிலன்று உச்சத்தை யடைவது வழக்கம். ஈழத்தின் எல்லாப் பாகங்களிலுமிருந்து அடியார்கள் மிகப் பெருந்தொகையாக அன்று வருவார்கள். கண்கொள்ளாக்காட்சி, எல்லையில்லா இன்பம்.

அங்ஙனம் பேரின்பம் பெருக்கும் தேர்த் திருவிழா ஆடி மாதம் 31-ந் திகதி செவ்வாய்க்கிழமை நிகழவிருக்கின்றது. காலை எட்டு மணிக்கு சுவாமி தேர்மீதெழுந்தருளுவார். ஆவணி முதலாந் திகதி புதன்கிழமை தீர்த்தோற்சவமும் 2 உ வியாழக்கிழமை பூங்காவனத் திருவிழாவும் நடைபெற்று உற்சவம் நிறைவுறும்.

## இரண்டாவது சர்வகலாசாலை இன்றியமையாது வேண்டப்படுகின்றது

கண்டியிலுள்ள கோடு வெளிமாணவர் பரீட்சை வசதியுள்ள மற்றொரு சர்வகலாசாலை கொழும்பிலே உடனே அமைக்கவேண்டுமென்று சென்ற சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடந்த கல்வித்துறை அறிஞர் கூட்டமொன்றில் பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டது. உயர்தரக் கல்வி வசதி வேண்டிய அளவுக்கு இல்லாமையே இதற்கு நியாயமாக எடுத்துக் காட்டப்பட்டது.

ஸ்ரீ சி. குமாரசாமி அவர்கள் தலைவராகவும் ஸ்ரீ கே. ஏ. செல்லையா அவர்கள் காரியதரிசியாகவும் கடமையாற்றினர்கள். அமைச்சர் ஸ்ரீ எஸ். நடேசன், பாராளுமன்றக் காரியதரிசி ஸ்ரீ வி. குமாரசாமி, ஸ்ரீ சி. வன்னியசிங்கம், நகரசபைத் தலைவர் ஸ்ரீ எம். எம். சுல்தான், வண. எஸ் கே. பங்கர், வண பிதா எஸ் என். அருள்நேசன் முதலியோர் ஆராய்ச்சிப் பேச்சுகளிற்பங்குபற்றினர்

பிரேரணைத் தொடர்பில் வேண்டியது செய்தற்குப் பின் வருவோர் தெரிவு செய்யப்பெற்றனர்:—தலைவர் ஸ்ரீ சி. குமாரசாமி, வண எஸ், கே. பங்கர், வண பிதா எஸ். என். அருள்நேசன். ஸ்ரீ எஸ். ஆர். கனகநாயகம், ஸ்ரீமதி எம. தம்பையா. ஸ்ரீ எம் எம். சுல்தான், திருவாளர்கள் த. முத்துச்சாமிப் பிள்ளை, எஸ். எச் பேரினபநாயகம், ஏ. ஈ. தம்பர், கே. ஏ. செல்லையா.

### தமிழுக்குச் சம உரிமை

தமிழ் சிங்களம ஆகிய இருமொழிகளுக்கும் நாடெங்கும் சமஉரிமை கொடுக்கப்பட வேண்டுமென்றும் அதற்குத் தகுந்த திருத்தம அரசியல் திட்டத்தில் செய்ய வேண்டுமென்றும் ஓர் பிரேரணையை [illegible] பாராளுமன்றத்து [illegible] பிரிப் பாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அறிவித்தல்

நிகழும் ஆடி ௴ 31-ந் திகதி செவ்வாய்க்கிழமையும் ஆவணி 1 ௨ புதன்கிழமையும் (16,17-8-55) நல்லூர் கந்தசுவாமி கோவில் தேர் தீர்த்த உற்சவங்களின் பொருட்டு சைவப்பிரகாசயந்திரசாலையும் இந்துசாதனக் காரியாலயமும் மூடப்படும் என்பதை அன்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

அதிபர்

வாழக அந்தணர்வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

## இந்துசாதனம்

யாழ். மன்மத ௵ ஆடி ௴ ௨௭ ௨ வெள்ளிக்கிழமை

### மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்க ...

'சோதிஇளம்பரிதி நாறு பிரங்கோடி போல வளர்ந்து தெய்வீக வடிவம் உளந்தனிற் கண்டு ஆதரிப்போர்க்கு ஆருயிராய் அன்பர் அகத்தாமரையின் மீதிருக்கும் தெய்வ விளக்கொளியா'ம் திருமுருகன் கோயில் கொண்டெழுந்தருளிய திவ்விய நிலையங்களிற் பெருவிழாக் காலம் நிகழ்கின்றது. வரலாற்றுப் பெருமை வாய்ந்த மாவிட்டபுரத்திலும் மாணிக்க கங்கை வனப்பமைந் கதிரைமலையிலும் பல்லாயிரக் கணக்கான அன்பர்கள் 'உலகம் உய்ய உதித்த ஒரு திருமுருகன்' கருணைக்காட்சியைக் கண்டின்புற்றனர்.

தென்னை மாப் பலா சூழும் பழம்பதி நல்லூரிலே 'வேல் கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வன்' அருள் அழகு பொலிய வீதிவலம் வரும் திருவிழா நிகழ்கின்றது. இப் பெருங்கோயில்களில் எல்லாம் இறைவனை மனம் மொழி மெய்யால் வணங்குவதற்கு ஏற்ற சைவச் சூழ்நிலை இருப்பதொன்றே இந்நாட்டிலுள்ள அஞ்ஞான இருள் நீங்கி அறிவெனும் ஒளி பரப்புவதற்குரிய பேறாகும். மூவிரு திருமுகங்களில் ஒன்று 'மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப் பல்கதிர் விரிக்கு'ம் முருகப்பெருமானின் அருளைப் பெறுவதற்கு ஆலயங்கள் அன்பர்கள் உள்ளத்தைத் தெய்விக வளத்திலே அமையும் வண்ணம் சாலவும் நன்றாகப் பொலிதல்வேண்டும். 'நகமெலாம் தேயக் கையால் நாண்மலர் தொழுது தூவி முகமெலாம் கண்ணீர்மல்க முன் பணிந் தேத்தும் தொண்டர் அகமலாற் கோயில் இல்லை' என்று திருவாய் மலர்ந்தனர் அப்பர் அடிகள்.

விழாக்கள் நிகழ்த்தப் பெறும் விதிகளுக்கமைந்த கோயில்களிலே எக்காலத்திலும் அன்பர்கள் இறைவன் அடியார்க்காளாகி ஆனந்தப்பொங்கும் அகத்தராகி நிற்கின்றமையும் அவ்வாறு இன்புறும் விதியிலா மதியிலிகள் 'அறமை இவ்வுலகு தன்னையாமெனக் கருதி நிற்கும் வெறுமையிலே வேண்டாத தகாதனவற்றைக் கையாண்டு திருஅருட் பொலிவுக்குரிய நிலையங்களைக் களியாட்டங்களுக்கும் வேடிக்கைகளுக்கும் இடமாக்கி ஈற்றில 'முயல்விட்டுக் காக்கைப்பின் சென்றவாறு பொன்னும் இழந்து முகப் பொலிவும் அற்றவர்களாய் இருள்மயத்தராய் இருப்பதையும் மக்கள் கண்கூடாகக் கண்டும் ஆலயங்களில் ஆகாத வழியில் ஒழுகுகின்றார்களே.

நள்ளிரவில் முடியவேண்டிய திருவிழா பலநாழிகைப்பொழுது கடந்து அடுத்த நாள் ஆதவன் கிரணங்களின் வெப்பந் தாக்கும் வரைக்கும் நடைபெறுவதையும், திருவுருவங்களை வேத சிவாகம விதிப்படி அலங்காரஞ் செய்யாது மாசுமறு மலிந்த சிறுமுறையிலே கூத்துக் கோலமாக என்று அடியார்கள் அலமரத் தக்கதாகச் சோடிப்பதையும், ஒலிபரப்பி மூலம் ஒவ்வாத உலக போகத்துக்குரிய பாட்டுக்களை அழுத்தந் திருத்தமாகப் பாடி 'வந்த காரியம்மறந்து சிந்தையை மயக்கும், மாபாதகத்தையும் நீக்குவதற்கு நல்லூர் மாவிட்டபுரம், வண்ணை, கீரிமலை போன்ற ஆலயங்களின் ஒழுங்குகளைப் பின்பற்றி எல்லாக் கோயில்களிலும் திருவிழாக்களை உரிய நெறியிலே நடத்துவதற்குச் சைவச் சங்கங்கள் இடைவிடாது முயன்று உழைத்தல் வேண்டும்.

அரசியல் ஊஞ்சல்:

# ஒன்றுக்கொன்று முரண்பாடான உரைகள்

## காரியம் பார்க்கக் கண்டபடி பேசவேண்டுமா?

அணுவின் ஆற்றலை விஞ்ஞானிகள் ஒரு சிலர் ஆராய்ந்தனர். பயங்கர ஆயுதங்களை உண்டுபண்ணப் புத்தி கூறினர். மனித குலத்தையே அழித்தொழிக்கக்கூடிய குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இப்பொழுது விஞ்ஞானிகள் அதே ஆற்றலை மனிதகுலம் வாழ்வதற்குரிய வளத்தைக் கொடுக்கக்கூடிய முறையிற் பயன்படுத்துதற்கு ஒன்றுகூடி ஆலோசிக்கின்றனர். நன்மையையும் தீமையையும் தன்னகத்தேயுள்ள அணு ஆற்றல் போன்று ஆர். ஜி அணுவிலும் இரு குணங்கள் அமைந்திருக்கின்றன.

சுடுங்கள் என்று சுடச்சுடச் சொன்ன தூயவாயால இந்த அரசியல் அணு வேறோர் இடத்திலே துப்பாக்கியும் வாளும் வேண்டாம். மண்வெட்டியும் கலப்பையும வேண்டும் என்று சொற்சோர்வுபடச் சொல்லியிருக்கின்றாராம். நாடக மேடையில விகடக் கூத்து வேடம் போட்டவர்கள் அழுவார்கள் அடுத்த கணத்திலே விழுந்து விழுந்து சிரிப்பார்கள். ஆனல் இந்த விகடர்கள் பொழுதுபோக்கிற்குரியவர்கள். அரசியல் நாடக விகடர்களுக்கு ஆங்கில மொழியில் 'பபூன' என்ற பதமே மிகமிகப் பொருந்தும்.

ஆர். ஜி. மட்டுமன்று, தமிழுக்கு ஆபத்தில்லை என்று ஓரிடத்தில்; இன்னோரிடத்தில் தமிழுக்கு ஆபத்து வரக்கூடுமா என்று கூறும் அரசியற் பெரி

தொடர்ச்சி 5-ம் பக்கம்

முன்னிதழ்த் தொடர்ச்சி

மகா கவி காளிதாசரின்

# குமார சம்பவம்

தமிழாக்கம்

பரமேஸ்வரக் கழகம் — ச இராமச்சந்திரன்

6. இமயமலையில் முத்துக்கள் மிகுதியாய் உள்ளன.

உருகு தண்பனி யாற்கரி கொல்லரி
உதிரக் காற்சுவ டுறுற்ற போதினும்
அருக தன்னகத் தாலுகு நித்திலத்
தங்கு வேடரவ் வாற்றை அறிவரால்.

7. இமயமலை தேவகன்னியரும் விரும்பும் அழகினையுடையது.

புண்ட ரீகத்தின் புள்ளிபெற் புள்ளிசேர்
பூர்ச்சப் பட்டைகள் பூணுமிரதத்தாற்
கண்ட விஞ்சையர் கன்னியர் காதலின்
கடித மாக்கிடுங் காகித மாகுமால்.

8. இமயத்தின் மூங்கிலும் இசை பாடும் தன்மையது.

மூங்கில் தன்னை முழைஞ்செனும் வாயினின்
மூசு வாயு முழுங்கிட ஊதுதல்
சங்கிம மாமலை ஏந்திசை கின்னரர்
இயப்பத் தான்சுதி ஈட்டுதல் போலுமே.

9. இமயமலை நறுமணமுள்ள மங்களை யுடையது.

அண்ணல் யானை அதன்தலை சேர்தின
வாற்ற வுண்ணினைந் தம்மலை மேலுயர்
தண்ணறுந் தேவ தாருவிற் தேய்க்கவத
தாரு வின்னறை தங்குங் குவடெலாம்.

10. இமயம் மகா ஔஷதிகளை யுடையது.

குகை எனும் பெயர்க் கூடத்திற் கூடலுட்
கொண்ட வேடர் கொடிச்சிய ருக்கெலாம்
வகைகொள் தீபத்தின் மாலிம யந்தனின்
மன்று மூலிகை வாலொளி செல்லுமால்.

(தொடரும்.)

# உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

இருவாரப் பலன்கள், 14-8-55 — 20-8-55

**மேடராசி அசுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.**

இந்தவாரம் உம்முடைய குடும்பச் சூழலில் சில சுகவீனங்கள் உம்மைச் சிறிது நிலைகுலைக்கும். நண்பருடன் வாக்குவாதங்களைத் தவிர்க்கவும் பணத்துறையில் நல்லவாரம். புது முயற்சிகளிற் சித்தி நிச்சயம்.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

இந்தவாரம் குடும்ப வாக்குவாதங்களுக்கிடமுண்டு. புது முயற்சிகள் கவனமாய்க் கையாளப்பட வேண்டும். நண்பர் அதிக உதவியாயிருப்பர். போட்டியிடுவோரை வெல்லுதற்குமிடமுண்டு.

**மிதுனராசி மிருகசீரிடம், 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3**

முன் அரையிலும் பின் அரை வாரம் நல்லதாயிருக்கும் அதிக தனலாபம் பெறக்கூடியதாயிருக்கும். சமூக சித்தியும் மனச்சமாதானமும் நிச்சயம்.

**கடகராசி புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.**

புதன்கிழமைவரை தேக சுகம் சிக்கலாகவேயிருக்கும் அதன்பின் உம்முடைய காரியங்கள் பலவற்றில் நல்ல திருத்தங்கள் நிச்சயம். செல [illegible] பெறுவீர்.

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.**

இந்தவாரம் சுகவீனங்களுக்கிடமுண்டு ஒன்றையும் புதிதாய்த் தொடங்கவேண்டாம் இனத்தவர்கள் உமக்குச் சிறிது கோபத்தை உண்டாக்கக்கூடும். உம்முடைய நடைமுறை அலுவல்களில் ஒரு மாற்றமுண்டாகும்.

**கன்னிராசி உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

ஒரு நல்ல வாரம். நீர் காத்திராத ஒன்றை இலாபமாகப் பெறுவீர். புது முயற்சிகள் நல்ல இலாபத்தைத் தரும் சமூக சித்தியும் குடும்ப சமாதானமும் நிச்சயம்.

**துலாமசித்திரை 3,4ம் பாதம். சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்**

இந்தவாரம் இனத்தவர்களுடன் சண்டைகளுக்கிடமுண்டு மனச் சமாதானமிருக்கமாட்டாது. பின் அரை வாரத்தில நண்பர் அதிக உதவியாயிருப்பர். தன லாபமும் நிச்சயம்.

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.**

வாரத்தின் முதல் இருநாட்களும் அதிகம் தொந்தரவாயிருக்கும். உமக்கு மனச் சமாதானமிருக்கமாட்டாது புதன்கிழமையின் பின் திருத்தம் நிச்சயம். உம்முடைய முயற்சிகளை முன்னேற்றுக.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 பாதம்**

முதல் இருநாட்களும் தளப்பமாகவே இருக்கும். புதன் வியாழன் சில குழப்பங்களை நீர் முன்னிட வேண்டி வரக்கூடும். வார மிகுதி நல்லதாகும். உம்முடைய சொந்தச் சிக்கல்கள் சில நீங்கிவிடும்.

**மகரராசி உத்தராடம் 2,3,4ம் பாதம திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

குடும்பக் காரியங்கள் தொடர்ந்து சிக்கலாகவேயிருக்கும். செலவதிகரிக்கும். தேகசுகமும் விசேட கவனம் கொடுக்கப்பட வேண்டும். ஆபத்தான மாற்றங்கள் உண்டாக மாட்டாதபோதிலும் உமக்கு மனச் சமாதானம் ஒருசிறிதும் இருக்க மாட்டாது. வியாழனும் வெள்ளியும் எல்லாவற்றிலும் பழுதானவை.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.**

கடைசிநாளைத் தவிர இந்தவாரம் நல்லாயிருக்கும். எதையும் தொடங்கும்பொழுது சில இடைஞ்சல்களை நீர் முன்னிடவேண்டி வரக்கூடும். ஆனல் இறுதியில் நீர் நிச்சயமாகச் சித்தியடைவீர். கடைசி நாள் கவனமாய்க் கழிக்கவேண்டும்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.**

முன் அரைவாரத்தில் உம்முடைய பிதாவழி இனத்தவர் உமக்குச் சிறிது கோபமூட்டக்கூடும் மிகுதி வாரம் மிக நல்லதாயிருக்கும், தன லாபமும் சமூக சித்தியும் நிச்சயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழ் மக்களின் உரிமை

## பல்லாயிரம் ஆண்டு விளங்கும் பண்பாடு

## சரித்திர காலத்துக்கு அப்பாற்பட்ட தனிச் சிறப்பு

ஈழநாட்டில் தமிழ் மக்களின் நிலைமை இஃது என்பதை உள்ளவாறறியாதார் இக்காலத்திற் பலருளர். சிங்களர் ஆயினென், தமிழர் ஆயினென், பிறர் ஆயினென் அவர்கள் யாவரும் இன்று இன்றியமையா தறியவேண்டிய அரிய உண்மைகளை வண சுவாமி தனிநாயகம் அவர்கள் கொழும்பில் நடந்த கூட்டத்திலே எடுத்துக் காட்டியுள்ளார். தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் அறியவேண்டிய ஒரு சில இங்கே தரப்படுகின்றன.

தமிழ்க் கலாசாரம் என்பது பல நூற்றூண்டுகளில்பெற்ற அனுபவத்தின் பயனுகிய சிறந்த தமிழ்வாழ்க்கை முறையேயாகும். அத்தகைய தமிழ்க்கலாசாரம் சரித்திர ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்ட காலந்தொடக்கம் இத்தீவில் நிலவிவருகின்றது.

### இந்து காலமும் இந்திய தொடர்பும்

தென் இந்திய மக்களுடன் சாதி கலாசாரம் முதலிய தொடர்புடைய மக்கள் பண்டுதொட்டே இலங்கையில் வாழ்ந்தார்களென்பதற்கு பூகர்ப்ப சாத்திர ஆராய்ச்சி, மானிட உடலமைப்பாராய்ச்சி, சரித்திர ஆராய்ச்சி, இலக்கிய ஆராய்ச்சி, மொழி ஆராய்ச்சி ஆகிய எல்லாம் ஆதாரமாயிருக்கின்றன. பண்பாடு பெற்ற மக்கள் விஜுயா வந்திறங்கிய காலத்தில இலங்கையில் வாழ்ந்தார்களென்பதை "மகாவம்சமே" ஒப்புக்கொள்ளுகின்றது. பௌத்த காலத்துக்கு முந்தியதாகிய "இந்து" காலமொன்று இங்கே இருந்திருப்பதாகவும் மகாவம்சம் கருதுகின்றது.

### இரு கலாசாரங்கள் இருந்தமை

தமிழ்க் கலாசாரம், சிங்கள கலாசாரம் ஆகிய இரண்டும் ஏககாலத்தில் இருந்தன என்பதற்கும் அறிகுறிகளிருக்கின்றன இடப்பெயர், நடனம், சித்திரம், சாதிசமூகச் சட்டங்கள் ஆதியவற்றை ஆராயும்பொழுது இவ்விரு கலாசாரங்களும் ஒன்றுடன மற்றது எவ்வாறு பிணைந்து குழைந்திருந்தது என்பதைக் காணலாம். இந்துகள், பௌத்தர், முஸ்லிம்கள் ஆகிய முச்சமயத்தினருக்கும் பொதுவானதாய், தென் இலங்கையில் கதிர்காமமும இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கும் பொதுவானதாய் வட இலங்கையில் நயினுதீவும இருப்பதுவுங் கூடியசான்று இவ்வுண்மையை விளக்குதற்கு வேறில்லை என்க.

### வளத்துடன் திகழும் கன்னித் தமிழ்

ஒரு சாதியாரின் அறிவுச் சிறப்பைக் கண்ணாடி போன்று காட்டுவது அவர்களுடைய மொழியாகும். தமிழ்மொழியானது இப்பொழுது பேசப்படும் மாதிரியே சென்ற இரண்டாயிரம் ஆண்டுகளாகப் பேசப்பட்டு வருகின்றது. அன்றியும் மூப்பது நாற்பது கோடி மக்கள் பேசும் உயிர்மொழியாக இந்தியா, இலங்கை, மலாயா, இந்தோனேஷியாமுதலிய பல நாடுகளில் அது இன்றும் நிலவுகின்றது. கிரேக்க, இலத்தின், சம்ஸ்கிருத மொழிகளைப் போன்ற இலக்கிய வளமுள்ள மொழியாய் அது இலங்குகின்றது. ஆனல் ஒரு வித்தியாசம உண்டு. அவை எல்லாம் அழிந்தொழிந்தவையாக இது உயிராற்றல் மிகுகியுள்ளனவாய் இன்றுள்ள ஏனைய மொழிகளுடன் கன்னித் தமிழாய்ச் சென்ற ஈராயிரம் ஆண்டுகளிற் போலவே இன்றும நிலவுகின்றது.

### தமிழ்மொழி தரும் பக்திப் பெருக்கு

ஆங்கிலம் வணிகமொழியாக, பிரெஞ்சு இராசதந்திரமொழியாக, இததாலி அன்பு மொழியாக, சர்மனி விஞ்ஞான மொழியாக, தமிழ் பக்தி மொழியாகின்றது. இதன பக்திப்பாடலகளின் ஆழமும், தொகையும், உணர்ச்சி வேகமும் அவ்வளவு மிகுந்தயாயிருப்பதனுல், அவற்றைத தொடர்ந்து படிப்பதன் விளைவாக, தியானம், யோகக் காட்சி ஆதியவை பற்றிய உண்மை உரைகளை இம்மொழி இனிது விளக்ககூடிய ஆற்றல வாய்ந்ததாய் விளங்குகின்றது.

### இயற்கையோ டியைந்த வாழ்க்கை

தமிழ் மக்களின் இலக்கிய வருணனைப் பாடல்கள் அவர்கள இயற்கையோடியைந்த வாழ்க்கையுடையவர்களாயிருந்தமையாலேயே எழுந்ததாகும்.

### வெளி நாட்டில் புகழ்நாட்டிய பெரியோர்

ஈழத் தமிழ்ப் பண்பாடு அத்துணைச் சக்தி மிகுதியுடையதா யிருந்தமையால் 13-ம் நூற்றூண்டிலே அது பல தமிழ் இலக்கியங்களை எமக்குத் தந்ததோடு பல புலவர்கள் கடல் கடந்து சென்று பேரும் பெருமதிப்பும் பெறச் செய்தது. தமிழ் சைவ மறுமலர்ச்சிக்கு ஆறுமுகநாவலரும், தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு உ. வை. தாமோதரம்பிள்ளையும், சரித்திரத்துக்கு வி. கனகசபையும், அகராதி ஆக்கத்துக்கு நா. கதிரவேற்பிள்ளையும், கல்வித்திறமைக்கு குமாரசுவாமிப் புலவருமாய் வெளிநாட்டில் பெரும்புகழ் படைத்தவர்களானுர்கள். சுவாமிவிபுலானந்தர் அண்ணமலைப் பல்கலைக் கழகத்திலமர்ந்தும், சுவாமி ஞானப்பிரகாசர் மொழி ஆராய்ச்சி செய்தும் பாராட்டப் பெற்றுர்கள்.

### தமிழ் மக்களின் தற்கால நிலைமை

இவை இங்ஙனமாக இன்றைய தமிழ்மக்களின் நிலைமையை ஆராயுமிடத்து தங்கள் பண்பாட்டுக்காதாரமான கொள்கைகளைப் பேணும் தன்மை, வீரியம், அறிவாற்றல் ஆதியவற்றை இவர்கள் இழந்துவிட்டார்களோ என்று அதிசயப்படவேண்டியிருக்கின்றது. தங்கள் பண்டைப் பண்பாட்டுக்காதாரமான கொள்கைகளைப் பேணுமையே அப் பண்பாட்டின் அழிவுக்கும் ஏதுவாகின்றது. எங்கள் பண்பாட்டுச் சிறப்புக்களைப் பரப்புவதில் பேரிடையூறாய் நிற்பது எம்மவர் பலருக்கு வாழ்க்கைத் தத்துவ அறிவு இல்லாமையே என்று சொல்லலாம். தத்துவ அறிவென்பது தேவதூதருக்கேயுரிய காரியமல்ல. அது மக்களுடைய காரியமாகும். ஒவ்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

# எல்லாம் இரகசியம்

1-ம் பக்கத்தொடர்ச்சி

என்பன மக்களுக்கு உபகாரப்படுகின்றன. இவையெல்லாம் தாமே நினைத்து அவ்வாறு உபகாரப்படுகின்றனவா? அவ்வாறு தோன்றினவா? இவற்றிற்கு உயிரோ, உணர்ச்சியோ, பகுத்தறிவோ, புத்தி தத்துவமோ இல்லையே! இவை யெல்லாம் ஒருவன் செய்து வைத்த மட்பாண்டம் போன்றவையே. புசிப்பதற்காகப் பொன்னிறமாகச் சுட்டு வைத்த வடை போன்றவையே. யாரோ மகா காருண்யவான், மகாவல்லவன் அவனது புத்தியிலும் சித்தத்திலும் பட்டு அவன் ஆக்கி வைத்த பொருட்களே இவையாவும். கடலுக்குச் சுங்கவரி வாங்குமவன் கடலை உண்டாக்கியவனை மறந்துவிடுகின்றுன். ஆகாயவீதி வழியே அவசரமாய்ப் பறக்குமவன் ஆகாயத்தை அமைத்துவைத்த அதிசாமர்த்தியனை மறந்துவிடுகின்றுன். சூரியக் கதிர்களால் பயிர் வளர்க்குமவன் சூரியனை உண்டாக்கிய தூயவனை மறந்துவிடுகின்றுன். நீருண்டு தாகம் தீருமவன் நீரை உண்டாக்கியவனில் மோகங்கொள்ளாது விடுகின்றுன். நிலத்தில் படுத்துறங்குமவன் நிலத்தை உண்டாக்கியவன் திறத்தை விளங்காது விடுகின்றுன். வாயுவைச் சுவாசித்து ஆயாசம் தீருமவன் வாயுவை உண்டாக்கியவனிடம் விசுவாசம் வைக்க மறந்துவிடுகின்றுன். ஆனல் இவ் விஷயங்கள் இரகசியமாகத்தான் இருக்கின்றன. யாரோ விஷய இரகசியங்களை உளவு களவாக அறியக்கூடிய ஊகசாலி மாத்திரம் இரகசியமாய் அறிந்து இரகசியமாக வைத்துக் கொள்கின்றுன். இவை நிற்க இன்னும் போவாம். மனுஷன் இந்த உலகத்திலே பிறந்துவிட்டான். அவனது உணர்ச்சிகள் வளரவேண்டும். அவனது உடம்பு வளரவேண்டும். 'ஐந்தும் மூன்றுமுண்டானல அறியாப் பெண்ணும் கறிசமைப்பாள்'' என்பது ஒரு பழமொழி. அதைப் போல ஐந்தையும் மூன்றையுங் கொடுத்து, அதாவது ஒருவனுக்கு வேண்டிய பல பொருள்கள் சந்தர்ப்பங்கள் அனுபவங்களைக் கொடுத்து அவனது உணர்ச்சியை உடம்பை வளர்த்துவிடுகின்றுன் அந்தப்பேருபகாரி. ஆனல் அந்தவிஷயம் - அந்தப் பேருபகாரி அவ்வாறு வளர்த்து வருகின்ற விஷயம் - வளருகின்ற அந்த மனிதனுக்கு விளங்காமலே நடந்தேறிவிடுகின்றது. உதாரணமாக ஒருவாழைமரம் இருக்கின்று வைத்துக்கொள்வோம். அதன் பழங்களும் பழுத்துவிட்டன. அந்த ஒரு மனிதன் அந்தப்பழங்களைப் பிடுங்கிச் சாப்பிட்டுப்பசிதீர்ந்துபோகின்றுன். அந்த வாழைப்பழ மூலமாக அவன் பசியைத்தீர்த்தபேருபகாரியை அவன் அறியாமலே போகின்றுன். அது மட்டுமல்ல அம்மரத்துப் பழத்தை உண்டு பசி தீர்ந்து கொள்ளும் வரைக்கும் அப்பேருபகாரி செய்த பயன்பட்ட உபகாரங்களை யெல்லாம் அவன் அறியாமலே போகின்றுன். அதற்குள்ளே இருக்கும் இரகசியவிசித்திரங்களை அவன் விளங்கிக்கொள்ளவில்லையே. அவ் வாழைமரம் அவனது சொந்தத் தோட்டத்தது என்றும் வைத்துக்கொள்வோம். இங்கே உள்ள இரகசியம் என்னவெனில் அப் பழங்கள் அனைத்தும் அவன் தனது சொந்தமென்று கருதுகலே. அது உண்மைதானு? அவ்வாழைத் தோட்டம உலகத்தில் ஒரு அணுதானே! உலகம் யாருடையதோ? அவனது தானே அத் தோட்டமும். பரம்பரை பரம்பரையாக வரம்பு கட்டி வாய்க்கால் வெட்டிவேலி போட்டுத் தனது தனது என்று கடதாசியில் எழுதி வைத்துக்கொண்டது தான் அவனுக்குச் சொந்தமே. இன்னும என்னையெனின் நிலமே, நீரே, வாயுவே, வெயிலே, ஆகாயமே என்றிவை இல்லாமல் அம் மரம் வளருமா? இவைகளை அவ் வாழைத தோட்டக்காரன் உண்டாக்கினுனு? பின்னை வாழை மரத்தானுவெனின் அதையும் அத் தோட்டக்காரன் சிருட்டிக்கவில்லையே. அதன் உருவம், தோற்றம், அங்க அமைவு, அதன் குணுகுணங்களெல்லாம் அவனுல் அதற்குக் கொடுக்கப்பட்டனவா? அப் பழத்திற்குச் சுவையும், நிறமும், உருவமும் வடிவும அவனுல் கொடுக்கப்பட்டனவா? இல்லையே! இவையில்லாமல் வாழையில பழம் பழுக்குமா! இது நிற்க அவ் வாழை மரம்தான் இம் மனிதனுக்கு எவ்வாறு கிடைத்தது? அடுத்த தோட்டத்துக் குட்டியில் இருந்தன்றோ! அத் தோட்டக்காரனும வேறு தோட்டத்தில் உள்ள வாழைக்குட்டிகளில் இருந்தன்றோ தன தோட்டத்தை உண்டாக்கினுன். இதை விசாரித்துக்கொண்டே போனுல் எல்லாரும் அடுத்தடுத்த தோட்டத்துக் குட்டிகளை எடுத்து நட்டு வாழைத் தோட்டத்தை உண்டாக்கியவர்கள்தானே. ஆதியில் ஒரு வாழைத் தோட்டத்தை அமைத்து அத் தோட்டத்திலே வாழைகளை நட்டு (படைத்து) அவ்வாழைகளுக்குக் குட்டியையும போடப பழக்கி விட்டவன் அல்லவோ பேருபகாரி! அப் பேருபகாரி யார்? இவ் விசாரணைக்கு இன்னும் அப்பாலே போவோம்.

ஒரு பொல்லாப்பு மில்லை.
எல்லாம் இரகசியம்.
எப்பவோ முடிந்தகாரியம்.
முழுதும் உண்மை. சுபம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பந்தமூடைய சம்பந்தரை நான் அங்கு காண்பேன்! எங்கு?

தனதருகேயுள்ளதான மரமொன்றைப் பற்றுக்கோடாகக் கொண்டு வளராநின்ற செடியானது அம்மரம் ஒருவனால் அழிக்கப்பட்டவிடத்து எவ்வாறு தத்தளிக்குமோ அதே நிலையில் திரு. ம. வே. திருஞானசம்பந்தர் காலத் தசனால் அழிக்கப்பட்டார் என்று பத்திரிகையிற்படித்ததும் நான் நின்ற இடத்தில் இருந்து விட்டேன். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிற் கல்வி கற்று சம்பந்தருடன் சம்பந்தங் கொண்ட நான், அவரின் சற்குண சீலங்களை நினைத்து நினைத்து இடையிடையே இந்துசாதன காரியாலயத்திலோ அன்றி அவர்தம் இல்லத்திலேயோ அவரைக் காண்பது வழக்கம். ஆனால் சென்ற சித்திரையில் அவரைக் கண்ட நான் யாழ்ப்பாணத்திலல்ல இறைவனின் திருவடி நீழலிலே இனிக் காண்பேனு? ஆம் அங்கேதான் சென்றிருப்பார் அங்கே காண்பேன்.

அவர் இந்துக்கல்லூரியில் கடமையாற்றிய காலத்து மாணுக்கர் மனங்களில் விதைத்த விதைகள் அளப்பில. உடல், பொருள் ஆவி ஆகிய மூன்றையும் அர்ப்பணித்த சம்பந்தர் ஆற்றிய அறமும் பல. இந்துக்கல்லூரியில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தர்மக்காசு கொடுக்கும் பழக்கத்தைப் பிள்ளைகளுக்கு உண்டாக்கிய பெருமை சம்பந்தருக்கே உரியது. வகுப்பில்

ச. பொ. பாலசிங்கம்

மகனே! மகளே! என்ற ஓசை, வகுப்பு முடிந்த பின் 'சித்திரப் பாவைபோலிரு' என்னும் இனியமொழி தேவார பாராயண நேரத்தில் இன்னிசை; இவையெல்லாம் என்றும் எவராலும் மறக்கற்பாலனவல்ல. அரிச்சந்திர புராணம் மயானகாண்டத்தில், சந்திரமதி புலம்பல் என்ற பகுதியில் "பனியால் நனைந்து, வெயிலாலுலர்ந்து பசியாலலைந்து மூலவா" என்ற பாடலைச் சம்பந்தர் பாடினால் அக்க சாகரத்தில் மூழ்காத பிள்ளைகள் அக்காலத்தில் வகுப்பில் ஒருவருமே இருக்கவில்லை.

கல்லூரியில் மாத்திரமல்ல வீட்டிலுங்கூட அவருடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பமேற்பட்ட போதெல்லாம் அவரது அமைதியான சாந்தவாழ்க்கையைக் கண்ணுற்று நான் அகங்களித்தேன். கோபப்பேச்சே கிடைக்காத குடும்பக் கோயில்களை, அன்பு தவழும் இல்லங்களைக் காண்பது மிக அரிது. ஆனால் நான் கண்ட அன்புருவங்கள் வாழும் இன்பப் பூஞ்சோலைகளில் சம்பந்தரதும் ஒன்று. கசடறக் கற்று சைவ வாழ்க்கை வாழ்ந்து சைவத்தைப் பரப்பி, தான் பெற்ற இன்பம் பிறர்பெறக் கொடுத்து வாழ்ந்த சம்பந்தர் பிரிந்து விட்டார். அவர் சாந்தியடையுமாறு யாவரும் பிரார்த்திப்போமாக.

## புத்தர்வழி நிற்பவர் நேரு ஒருவரே

காலப்பிட்டியைச் சேர்ந்த உலப்பனையிலுள்ள இலங்கை பிக்கு சங்கத்தின ஸ்ரீ பண்டித ஹெறசால தம்மரத்தன அவர்கள் பேசும்போது புத்த தர்மத்தைக் கடைப்பிடிப்பவர் உலகம் முழுவதிலும் பண்டிதநேரு ஒருவரே என்று கூறினுராம்.

## வண்ணார்பண்ணை தட்டாதெரு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை பெற்றோர்தினக் கொண்டாட்டம்

மேற்படி கொண்டாட்டம் 27-7-55 புதன்கிழமை மாலை 6 மணியளவில் ஷ வித்தியாசாலை மண்டபத்தில் வட்டார வித்தியாதரிசி சி. ஜே. இம்மானுவெல் பி. ஏ. அவர்களின் தலைமையில் ஆராதனையுடன் ஆரம்பமாயது. பாடசாலைக் கீதத்தை மாணவர்கள் இசைத்து வணக்கஞ் செலுத்தினுர்கள். தலைமையாசிரியர் திரு. க. இரத்தினசபாபதி அவர்கள் பாடசாலை வளர்ச்சி சம்பந்தமான நிகழ்ச்சிகளை நிரம்பிய அறிக்கையை வாசித்து அளித்தார்கள்.

தலைவர் அவர்கள் தமது முன்னுரையில "இப் பாடசாலையில கருத்துடையபெற்றூர், முகாமைககாரர், ஆசிரியர் ஆகிய முத்திறத்தாரும் ஒத்துழைத்து மாணவர்களுக்குப் போதிக்கப்படும கல்வியின் தரத்தை உயர்த்தியதினுல மாணவர்களின் எண்ணிக்கையும ஆசிரியர்களின் எண்ணிக்கையும கூடி சங்கீதம், விளையாட்டு, சமயவாழ்க்கை முதலான சகல துறைகளிலும் பணியாற்றி இம்மாவட்டத்தில ஒளிபெற்று விளங்குவதையிட்டு எனது பாராட்டுதலையும சந்தோஷத்தையும் தெரிவிப்பதோடு இன்னும இப்பாடசாலை முன்னேற்றத்திற்குரிய வழிகளில் வழிநடத்தப்படவேண்டுமென இறைவனை வேண்டுகிறேன்" என்று கூறினுர்கள்.

இதன்பின் மாணவர்களால் "வாணிகடனம் முதல "நளாயினி நாடகம்" ஈருன பதினுறு கதம்ப நிகழ்ச்சிகள் திறம்பட நடாத்தப்பட்டன.

## ஈழத் தமிழ் மக்களின் உரிமை

[ 3-ம் பக்கத் தொடர்ச்சி ]

வொருவருடைய காரியமுமாகும்.

### இந்நாட்டிற்குரியது தமிழ்

தமிழ்ப் பண்பாடு அழியாது நிலவ வேண்டுமேயானுல் அரசியல், சமூகம், கல்வி ஆகிய எல்லாத் துறைகளிலும் தமிழ்மொழி உபயோகிக்கப்பட வேண்டும். இன்று இரண்டுகோடி மக்களுக்கு மேற்பட்டவர்கள் தமிழ் மொழியைப் பேசுகிறுர்கள். இம்மொழி இந் நாட்டிற் பிறந்து இந்நாட்டிற்குரியதாகவேயிருக்கின்றது. மக்களின் வாழ்க்கைப் பண்பாட்டமைப்பில் அதன் சக்தி செய்யும் தொழில் அதைப் பேசுவோரின் தொகையைப் பொறுத்ததல்ல. சொற்களிலே சரித்திர உண்மைகள் அரசியல் சமூகக் கருத்துக்கள் பல பொதிந்திருக்கின்றன.

தமிழ்மொழி ஆட்சி மொழி ஆகாவிட்டால் ஈழத் தமிழ் மக்களின் வளம் குறையுமென்பதற்கும் அவ்வாறு ஆட்சியில் வராமையால் தமிழ் வளம் குறையும் என்பதற்கும் அத்தாட்சியாகப் பலநூற்றுக்கணக்கான சொற்களை நான் எடுத்துக் காட்டமுடியும்.

### நிலை தவறிய மறுதலை மொழிகள்

தமிழ்மொழியைக் கல்வி பயிற்றும் மொழியாக வைத்து அரசகருமமொழியாக வையாது விட விரும்புவோருடைய கூற்றுக்களில் எல்லை கடந்து நிலை தவறிய மறுதலை மொழிகள் இருக்கின்றன. இந்நாட்டு மக்களுக்குச் சம உரிமை இருக்கின்றதேயானுல் எவரும இந்நாட்டில் எவ்விடத்திலும் சேவை செய்யக்கூடியவராய் அரசாங்க சேவையிலுள்ளோர் இருமொழி அறிவும் உடையவர்களாய் இருத்தல் வேண்டும.

### அரச கருமம் இருமொழிகளில் நூதனமல்ல

இவ்வாறு இருமொழிகள் அரச கரும மொழிகளாயிருத்தல் நூதனமானதொன்றல்ல என்பதைத் தென் ஆபிரிக்கா, கனடா, பெல்ஜியம், சுவிற்சர்லந்து முதலிய நாடுகளின் சரித்திரங்களிலிருந்து அறியலாம. மூன்று சாதியினர் நான்கு மொழியினர், மூன்று சமயத்தினராகிய சுவிற்சர்லந்து மக்கள் அந்நாட்டு மக்கள் யாவரையும ஒரே நாட்டு மக்கள் [illegible] குடியினராக்கி ஒற்றுமைத்தார்களென்றால் இருமொழிகளுள்ள இலங்கையருக்கு அவ்வாறு செய்வதிற் பேரிடையூறு உண்டாக இடமில்லை.

### பண்பாட்டு வளர்ச்சிக்கு பல்கலைக் கழகக் கல்வி

வளர்ந்து வருகின்ற ஒரு பண்பாட்டுக்கு ஒரு மொழி ஆதாரமானதாயிருக்க வேண்டுமேயானுல் அது பல்கலைக் கழகம்வரையிற் கல்விமொழி ஆதல்வேண்டும்.

தமிழ் மக்களிடையே இன்று ஆக்கவேலைகள் இல்லாமைக்கு மூல காரணம் ஆராய்ச்சி நிலையம் ஒன்றில்லாமையே யாகும். மக்களின் தேவைகளையும் நோக்கும் ...த்து வடக்கு மாகாணத்தில் அல்லது கிழக்குமாகாணத்தில் ஒன்றும தென் மாகாணத்தில ஒன்றுமாக இன்னும இரு பல்கலைக் கழகங்களமைத்தற்குப் போதிய நியாய முண்டு

### சர்வகலாசாலையில் சம உரிமை

தமிழ்மொழிக்குச் சர்வகலாசாலையிலோ சர்வகலாசாலைகளிலோ சம உரிமை கொடாது விடுவதேயானுல் உயர்தரக் கல்வியால் வரும் அறிவாற்றல, தேசத்தொண்டுக்குத் தேவையான தகுதியுடைமை, வாழ்க்கைப் பண்பாட்டுச் சிறப்பு ஆகியவற்றைத் தமிழ் மக்களுக்குக் கொடுக்க மறுப்பதேயாகும். இருமொழிப் பல்கலைக் கழகம நூதனமானதென்று சும்மா நினைப்பதனுல் பல்கலைக் கழகம் தரும் இக் கனி சிறந்த நன்மைகளை எமக்கு மறுப்பதாகுமா?

### தமிழர்களின் தீர்மானம்

நாங்கள் ஈழ மக்கள். தமிழ்மொழி தனக்குள்ள உரிமையுடன் இந் நாட்டில் இயல்பாயமைந்துள்ளது. தமிழ்மொழியானது உலகின் வேறு எப் பகுதிகளிலாயினும் உயிராற்றலிழந்தொழிந்து போனுலும், இந்நாட்டில் அது உயிராற்றலுடன் ஓங்கி வளர்ந்திலங்க நாம யாவரும் உறுதியாக முயலுவோம்.

## பாக்கிஸ்தான் தேசாதிபதி

பாக்கிஸ்தான் தேசாதிபதி ஸ்ரீ குலாம் முகமது அவர்கள் நோய்வாய்ப்பட்டிருப்பதால் தளபதித் தலைவர் ஸ்ரீமிர்சா தறகாலிக தேசாதிபதியாக நியமிக்கப்பெற்றூர்.


## தேவை

அராலி வள்ளியம்மை ஞாபக வித்தியாசாலைக்கு ஆங்கிலம் S.S.C. உடன் தமிழில் பயிற்றப்பட்ட ஓர் உதவி ஆசிரியை தேவை. விரும்பினேர் 20-8-55க்கு முன் விண்ணப்பிக்க. விசேஷ தகைமைகள் கவனிக்கப்படும்.

ஆ. சேதுபதி
மனேஜர்.

வட்டுக்கோட்டை,
6-8-55

M 102 12, 19-8-55



## போக்குவரத்து அறிவித்தல்

### நல்லூர் கந்தசுவாமி கோவில்

### வருட மகோற்சவம் 1955

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மகோற்சவம் காரணமாக, கீழே காட்டப்படும் தெருவீதிகள் 1955-ம் ஆண்டு ஆடி மாதம் 24-ந் திகதி தொடக்கம் ஆவணி மாதம் 18 ந் திகதி வரையும் எவ்வகையான வண்டிகளும் கீழ்க் காட்டப்படும் வீதிகளால் போக்குவரத்துச் செய்யாமல் தடுக்கப்படும்.

(அ) யாழ்ப்பாணம் பருத்தித் துறைப் பெருந் தெருவில் அரசடிச் சந்திக்கும் 2-ம் மைல் கல்லுக்குமிடையே உள்ள பாகம்,

(ஆ) பண்டாரக் குளத்து ஒழுங்கைக்கும் சோமசுந்தரம் ஒழுங்கைக்கும் இடையேயுள்ள கோயிலின் வீதி.

2. சமயோசிதமாக மாற்றப்படும் தெருக்களின விபரம்:

**குறித்த காலத்திலே வண்டிகள் இரதங்களைச் செலுத்துவோர் கீழே காட்டப்படும் தெருக்கள் மூலம் செலுத்துவார்களாக.**

(அ) யாழ்ப்பாணத்திலிருந்து கோப்பாய் மார்க்கம் (அல்லது எதிர்ப்புறம்) போக்கு வரவு செய்வோர் நாவலர் தெருவாலும், நல்லூர் குறுக்குத் தெருவாலும் செலுத்துக.

(ஆ) அரசடித் தெருமூலம் கோப்பாய் மார்க்கம் (அல்லது எதிர்ப்புறம்) செலுத்துவோர் "உவைமன்" தெரு நாவலர் தெரு நல்லூர்க் குறுக்குத் தெரு மார்க்கமாகச் செலுத்திச் செல்லுக,

3. திருவிழாத் தரிசனத்துக்கு வண்டிகள் இரதங்கள் மூலமாகச் செல்வோரின் சௌகரியத்தை உத்தேசித்து அவ்வண்டிகளையும் இரதங்களையும் கொண்டு போய் நிலே ஒதுக்கி விடுதற்கான தானங்கள். மூன்றிடத்தில் அமைக்கப்படுகின்றன. அவற்றைச் சாரதிகள் பயன்படுத்துவார்களாக.

(அ) அரசடித் தெரு மூலமாகக் குறித்த கோயிலுக்குச் செல்லும் வண்டிகள் இரதங்கள் வீரமாகாளி அம்மன் கோயில் நிலத்தில் விடப்படலாம்.

(ஆ) தெற்கிலிருந்து கோயில் தெருவீதியால் வரும் வண்டிகள் இரதங்கள் கைலாய பிள்ளையார் கோவில் நிலத்தில் விடப்படலாம்.

(இ) கோப்பாய் மார்க்கமாக வரும் வண்டிகள் இரதங்கள் முத்திரைச்சந்தை நிலத்தில் விடப்படலாம்.

(Sgd)
W. E. C. JEBANASAM
வடமாகாணப் பாடிகாவல மேற்பார்வையாளர்

பாடிகாவலநிலையம் (Police Office)
யாழ்ப்பாணம்
15 ஆடி 1955

M, 81 15, 22-7-55.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர் மன்றம்

# கற்பின் பெருமை ஒப்பிலது

உலக மக்களிற் பெண்பாலார் இல்லற வாழ்க்கை புகும்போது தம் மனத்தை கற்பின் உறைவிடமாகக் கொள்ளவேண்டும். தற்போது கற்பு எனும் பொற்பு அற்றுப் போயிருப்பதால் விவாக நீக்கங்கள் ஏற்படுகின்றன. மேல்நாட்டாரின் கலாச்சாரத்தையொட்டி இவ்வாறு தமிழ் மக்கள் நிற்பது பெருந்தவறு. கற்புடை மாதின் எழில் பொன்போல் மதிக்கப்படும். வாழ்க்கைத் துணைவியான இவள் தன் கணவனின் வருவாய்க்கேற்பச் செலவிட்டு அவன் சொல்லைப் பணிவுடன் கேட்டு மகிழ்வுடன் நடந்து கொள்வது பெருமையுடைத்து.

ஆணும் பெண்ணும் ஒருவர்க்கொருவர் நிறைவு தரும் இரு பகுதிகளாவர். பெண்ணின்றி ஆண் தனித்துநிற்றல் சிறப்பிலதாகும்.

ஆண் பெண்ணினின்று உயர்ந்ததாகவோ பெண் ஆணினின்று உயர்ந்ததாகவோ கொள்ளுதல் பிழையுடைத்து. பெண்கள் ஆடவருக்காகவே படைக்கப்பட்டவரென்றும், அவர் ஆடவரின் உடைமைப் பொருளே என்றும் அன்னாரை அடிமை வாழ்விற் செலுத்துவது பழியுடைத்து. இப்புன்னெறி அறிவிற் குறைந்த விலங்கினத்திற் காணப்படாது அறிவு படைத்த மனிதனிடத்துக் காணப்படுமேயானால் என்னே இக்கோலம்!

பண்டைத் தமிழர் சமுதாய வாழ்க்கையை ஆராயுமிடத்து பெண்கள் ஆண்களோடு ஒத்த உரிமை பெற்று ஏற்றத் தாழ்வின்றி வாழ்ந்தனர். அறநூல்களில் இருபாலாருக்கும் வெவ்வேறு நீதி கற்பிக்கப்படவில்லை. நந்தமிழ் இலக்கியச் சோலையில் வீரத்தாயர் பலர் விளங்கினர். கற்பின் பொற்பு பொலிந்து இலங்குவதைக் காணலாம்.

பெண்மை கற்பென்னுந் திண்மையோடு கூடியவழி அதனினும் பார்க்க உயர்ந்த தகைமை பிறிதொன்றில்லை என்பதே வள்ளுவர் உள்ளியது. "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்று ஔவையார் கூறியது ஒரு பேராற்றலைக் குறிக்கும். எனவே கற்பு என்பது வலிய தொன்று. இப்பண்பு பெண்மைப் பண்போடு கூடினின்றால் வன்மையும் மென்மையும் விரவி நின்றால அதனினும் பார்க்க உயர்ந்த தகைமை உலகில் பிறிதில்லை என்பது கூறாமலே விளங்கும்.

கற்புடைப்பெண் தன் காதலனின் தலைவனிக்குரியளாய் உள்ளமுருகி தன் தலைவனை மனமார வணங்குவள். இத்தொழுகை இழிவுடையதாகக் கருதுதல் பெரும் அறியாமையாகும். இஃது உயர்வின் முடிபென்றே கருதத்தகும். இறைவனிடத்து தூய அன்பை நாட்டிச் செயல் புரிதலை ஒப்பது என்பது இது. இந்நிலைமையை அடைதற்கு ஆடவர் எத்துணை உயர்வு பூண்டவராயிருக்க வேண்டும்? இல்வாழ்க்கை எவ்வளவு உயர்வடைகின்றது.

# மணமிழந்த மலராயது ஈழம்

## பண்டிதர் பிரிவால் வருந்துகின்றனர் மக்கள்

ஈழநாடே! உனது தற்போதைய நிலையை என்னென்றெடுத்துரைப்பேன! மணமிழந்த மலராயும், மதியிழந்த வானும் மணியிழந்த நாகமாயும் காட்சியளிக்கின்றாய் நீ! சிறப்புடன் வைத்திருந்த ஒரு சைவ அபிமானியையும், பத்திராதிபரையும், நகைச்சுவையாளனையும், எழுத்தாளனையும், பிரசங்கியையுமன்றோ இழந்து பரிதவிக்கின்றது வண்ணைடம்பதி.

பண்டிதர்மறைவால் சைவ உலகமும் தமிழுலகமும் தவிக்கின்றது. தான் உயிருடன் இருக்கும்வரையில் தன்னுடம்பில் ஒரு துளி இரத்தம் இருக்கும்வரையில் சைவத்திறகும தமிழுக்குமாகப் பாடுபட்டார் பண்டிதர். தனது சைவப்பிரசங்கங்கள்மூலம மக்களுக்குச் சைவத்தின் மேன்மையை எடுத்து உரைத்தார். தற்காலத்தில் எங்கும் சுலபமாகப் பரவும் தெய்வத்திற்கு மாறான உலகாயதக்கொள்கைகள் நமது மக்களின் மனதுள்ளே புகவிடாது அரண்போல் அமைந்து வந்தன நமது சப்பந்தரின் பிரசங்கங்கள். மிக எளிய முறையில் பல கருத்துக்கள் பொதிந்த உண்மைகளை நம் மனத்தில் பதிய வைத்த இச் சைவசிலர் தனது தேகசுகத்தையும் கவனியாது சைவசமயப் பணியிலும் ஆலயப்பணியிலும் தமது வாழ்நாட்களில் பெரும்பாகத்தைச் செலவழித்து வந்தார்.

தமிழ் உலகம் முழுவதும் கை கூப்பி வணங்கக்கூடிய பெரியார் இவர். தமிழ்வளர்ச்சியில் அதிக ஊக்கத்தைச்

## "செல்வி" சிதம்பரம்

செலுத்தி வந்த பண்டிதருக்குத் தகுந்த சந்தர்ப்பத்தை அளித்தது சைவ பரிபாலன சபை. இசைவபரிபாலனசபைவேறு பண்டிதர் வேறு என்று நாம் கூறமுடியாது. இச்சபையின் உயிர்நாடியாய் விளங்கினார் பண்டிதர். சபையின் சார்பில் எத்தனையோ பிரசங்கங்களையும், மகாநாடுகளையும் ஒழுங்கு பண்ணி, அவற்றின் வெற்றியில் தனது மகிழ்ச்சியையும் மனச் சாந்தியையும கண்டார். தனது இறுதிநாட்களில் கூட மேற்படி சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில், முத்தமிழ்ப் பெருஞ்சொற் கொண்டல் புரிசை முருகேச முதலியாரின் இன்னிசைப் பிரசங்கங்களை நடாத்தி வைத்து, சைவ மக்களை மகிழச் செய்து தானும் மகிழ்ந்தார். என்னே இவரின் சைவத்தொண்டு!

இவர் ஆசிரியராகக்கடமையாற்றிய காரணத்தினால் ... போது அநேக மக்களின் அஞ்ஞானத்தை நீக்கி, ஞானத்தைத் தந்த, நமது அன்பும் அறிவும் ஒழுக்கமுமமைந்த உபாத்தியாயர் ஒருவரை இழந்து விட்டோமே என்று புலம்புகின்றனர். அன்னவர் இறைவன் திருவடி நீழலை அடைந்து விட்டார். அவர் பிரிவால் வாடும் அம்மையார்க்கும் அன்புடைய மக்களுக்கும் என் ... அனுதாபத்தைத் தெரிவிக்கின்றேன்.

## அரசியல் அலை

2-ம் பக்கத்தொடர்ச்சி

யார்களும் இருக்கின்றார்கள்; 1934ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரைக்கும் அரசாங்க சபையிலும் பாராமன்றத்திலும் தமிழ் அங்கத்தவர்களால் நிகழ்த்தப்பெற்ற பேச்சுக்கள் Hansard என்னும் அறிக்கைப் புத்தகத்தில் உண்டல்லவா? இவற்றை எடுத்து ஆராய்ந்து பார்த்தால் தமிழைப் பாதுகாப்பதற்காகச் சொற் பெருக்காற்றியவர்களே இப்பொழுது தமிழர்களை எப்போதாவது சிங்களவர்கள் வேற்றுமை காட்டி நடத்தினார்களா என்று பேசியிருப்பதைக் காணலாம்.

இன்னம் ஒரு எடுத்துக் காட்டு. அரசாங்க சபையில் இடதுசாரி அங்கத்தவர் ஒருவர் தமிழ்மொழிக்கு அரச உரிமை கொடுப்பது சனநாயக முறைக்காகாது என்று கூறியுள்ளார். இப்பொழுது இரண்டு மொழிகளும் வேண்டுமென்று உறுதியாய்ச் சொல்லுகின்றார்,

மாறி மாறி வரும் அரசியல்விபரீதமே! இது யாரை ஏமாற்றுவதற்காக?

காலி அங்கத்தவர் திரு தகநாயக கல்வித் தேர்வுகளிலே சிங்களம் தமிழ் என்ற விபரீதம் இல்லவேயில்லையென்று கூறுகின்றாரே. இவர் ஓயாது ஆற்றிய சொற்பொழிவுகளை அலசிப் பார்த்தாற் சிங்களவர் மீது வகுப்புவாதப் பழி சுமத்தியிருப்பதை நன்கறியலாம்.

## கொக்குவில் இந்துக்கல்லூரி

ஒரு காவற்காரன் உடனே தேவை. தலைமை ஆசிரியர் மூலம் அதிபருக்கு விண்ணப்பம் செய்க. கடைசிநாள் 15-8-55.

பொது அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக்கலலூரியும்
இணைந்த பாடசாலைகளும்
M 109 12 8

## வட இலங்கை சங்கீத சபை

வட இலங்கைச் சங்கீத சபையார் நடத்துகின்ற பரீட்சை யாழ்ப்பாணம், கொழும்பு, திருக்கோணமலை ஆகிய இடங்களில் நடைபெறும் நூறபரீட்சை (Theory) மூன்று இடங்களிலும் 20 8-55-ல் நடக்கும் சாதனைபரீட்சை எந்தத் திகதியில் நடக்குமென்று குறித்த 20ந் திகதி மேற்பார்வை அதிகாரிகளால் அறிவிக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றுவோர் பரீட்சை அநுமதிப் பத்திரங்களை இந்த மாதம் 15-ந் திகதி வரையில் பெறுவிட்டால் அவர்கள் வடமாகாணம் வித்தியாதிகாரிக்கு உடனே அறிவிக்க வேண்டும்.

எஸ். பி. நடராசா
காரியதரிசி
யாழ்ப்பாணம்
10—8—55.
M 111 12-8


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

616313,00

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
Std. 14 20-11-46—20-11-49. சிறாப்பர்.


# கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டில்
சாசாலை முத்தையா கணபதிப்
பிள்ளை வழக்காளி

இல 790
எதிர்

1 மீசாலை தெற்கு வயிரமுத்து குமாரவேலு

காலஞ்சென்ற

2 சாவகச்சேரி வடக்கு தாமோதரம்பிள்ளை இரத்தினம்

3 மீசாலை தெற்கு தாமோதரம் பிள்ளை இரத்தினம் மகள் இந்திரவதனி இவதன் பராமரிப்புக்காரி 4-ம் எதிரி மூலமாக

4 டையூர் குஞ்சுத்தம்பி தாமோதரம்பிள்ளை இவர் இரண்டாம் எதிரிக்குப் பதிலாக
எதிராளிகள்

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டு 790-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப் பிரகாரம் கீழ்க் காணப்படும் ஆதனங்கள் 1955 ஸு புரட்டாதி மீ 7ந் உ பிற்பகல் 2 மணியளவில் அவ்வக்காணிகளுக்கின்று என்னாற் பிரசித்த ஏலத்தில விற்கப்படும்.

தீர்வைத்தொகை ரூபா 1150/-ம் 2-2-55 திகதி தொடக்கம 29 3 55 வரைக்கும் ரூபா. 1000/- க்கு 10% வீத வட்டியும் கூடி வரும் தொகைக்கு 30-3 55 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் 5% வீத வட்டியும் கோட்டுச் செலவு முடிந்த செலவு ரூபா 189–92 சதம் வெளியாத்துச் செலவ ரூபா 18/- அறவிடும செலவு ரூபா 56–55.

ஆதனவிடாப்பு

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கரைச்சிப்பகுதி கரைச்சிப்பற்று குஞ்சுப்பாந்தனிறை மாதவர் கொல்லனதறை அல்லது கொல்லன்தறையும் கரையடியும அல்லது வன்னியன்தறை செற்பரப்பு 200. எல்லை கிழக்கு வாய்க்காலும் குளமும். வடக்கு வண்ணார் பண்ணைச் சிவன் கோவிலாதனம், மேற்கு சுந்தரம் பிள்ளை வல்லிபுரத்துகதும் மறு பேருக்குமுரிய ஆதனங்கள் தெற்கு இதிற் சொல்லிய 2-ம் ஆதனம் பதிவு இல B 38/84 இதடங்கலிற் சொரியலாய் நாலில ஒரு பங்கு ($\frac{1}{4}$).

2ம் ஆதனம் டை கோவிற்பற்று பொறிக்கடவையிறை காரையடி செற்பரப்பு 220 எல்லை கிழக்கு வாய்க்கால், வடக்கு மேற்சொல்லிய 1-ம் ஆதனம் மேற்கு சுந்தரம் பிள்ளை வல்லிபுரத்துக்கும் சகோதரருக்குமுரியவாதனம். தெற்கு முடிக்குரிய நிலம் பதிவு இல. B 38/85 இதிற் சொரியலாய் நாலில் ஒரு பங்கு (1/4)

3-ம் ஆதனம் டை குஞ்சுப்பாந்தன் இறை மாதவர் கொல்லன் தறை செற்பரப்பு 200. எல்லை கிழக்கு வாய்க்காலும் குளமும் வடக்கு வண்ணார்பண்ணைச் சிவன்கோவிலாதனம. மேற்கு சுந்தரம்பிள்ளை வல்லிபுரத்துகதும் மறுபேருக்குமுரிய வாதனம். தெற்கு பின் குறிக்கப்படும் 4ம் ஆதனம. இதடங்கலிலும் புளியமரங்களிலும் சொரியலாய் அரைவாசியில் பன்னிரண்டில் ஒரு பங்கு பதிவு இல B 39/149.

4 ம் ஆதனம் டை பொறிக்கடவையிறை காரையடி செற்பரப்பு 220 எல்லை கிழக்கு வாய்க்கால் வடக்கு மேற்சொல்லிய 3ம் ஆதனம் மேற்கு சுந்தரம்பிள்ளை வல்லிபுரத்துக்கும் சகோதரனுக்குமுரிய வாதனம் தெற்கு முடிக்குரியநிலம் இதடங்கலிலும் புளியமரத்திலும் சொரியலாய் அரைவாசியில பன்னிரண்டில் ஒரு பங்கு பதிவு இல B 39/150

5ம் ஆதனம் டை குஞ்சுப்பாந்தனிறை அகலன்வயல் செற்பரப்பு 25. எல்லை கிழக்கு மாணிக்கம் பெண் காசிப்பிள்ளைக்குரியவாதனம். வடக்கு கதிரித்தம்பி கைம்பெண் காச்சிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய வாதனம். மேற்கு கொடிகாமம் கந்தசாமிகோவிலுக்கும் மறுபேருக்குமுரியவாதனம். தெற்கு முருகேசு தம்பிஐயாவுக்குரிய வாதனம். பதிவு இலக்கம் B 39/151. இதடங்கலிற்சொரியலாய் மூன்றிலொரு பங்கு ($\frac{1}{3}$)

மு நா. யார்க்கண்டு
கொமிஷனர்
சாவகச்சேரி,
1955ம் ஆ ஆவணி மீ 12 உ
M 110 12—8— (05.௫)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

---

பொன்னம்பலம் சிவஞானர்தமும்
பெண் சொர்ணம்மா
மானிப்பாய்
—வழக்காளி

இல. 11538

எதிராக

முத்து வாய்காவி மகன்
இராசம்மா — எதிராளி,

யாழ்ப்பாணம் பெரியகோட்டின் 11538ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப் படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1955 ஹு புரட்டாசி மீ 10 உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்

யாழ்ப்பாணம் கோண்டாவிலில் அத்தியல்லை என்னும் காணி கி. இ. 10½ அதற்குச் சேர்ந்தவைகளும்.

எல்லைகிழக்கு கதிரவேலு பெண் தங்கப்பிள்ளை

வடக்கும் மேற்கும் கந்தசுவாமி கோவில் ஆதனம். மறுவம்.

தெற்கு கந்தர் முத்துவாய்க்காவி இதில் சொரியலாக அரைவாசியில் கீ, இ. 3 கிணற்றுப் பங்கும் வழி வாய்க்கால் உருத்தும்.

வ. அ. துரையப்பா
கொமிஷனர்,
Jaffna, 8-8-55
M 107 12 8 (௫ 100)

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

---

வேலுப்பிள்ளை சபாபதி
கன்ளியன்காடு
வழக்காளி

இல 9434

எதிராக

சீனியர் தாமோதரம்பிள்ளை
கோண்டாவில் கிழக்கு பெண்
செல்லாச்சிப்பிள்ளை கன்ளியன்காடு
எதிராளி

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் 9434 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1955 ஹு புரட்டாசி மீ 24 உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:—முதல்வட்டி ரூபா 612-58 ம் இதற்குத் தீர்வைத் திகதி தொடக்கம் 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு 172-45.

### காணி விபரம்

1 யாழ்ப்பாணம் கோப்பாய்தெற்கில் கருவெம்பன் என்னும் காணி கி இ. 7 குளி 8 பயிர்களும் கிணற்றுப் பங்கும் வழி வாய்க்கால உருத்தும் குளி 5

எல்லை கிழக்கு ஒழுங்கை

வடக்கு கதிரேசு செல்லப்பாவும் சகோதரனும் ஒழுங்கையும்

மேற்கு வாய்க்கால்

தெற்கு ஆறுமுகம் ஐயாத்துரையின் ஆதனம்

2 மேற்படி கோப்பாய் தெற்கில் கருவெம்பன் என்னும் காணி கி இ 9 குளி 5 பயிர்களும் கிணறுப்பங்கும் தூர்வை வழிவாய்க்கால் உருத்தும்

எல்லை கிழக்கு வாய்க்காலும் வழியும்

வடக்கு உமையாத்தை

மேற்கு, தெற்கு ஒழுங்கையும் கணபதியின் ஆதனம் பங்காளரும்.

வ. அ. துரையப்பா
கொமிஷனர்
யாழ்ப்பாணம்
7—8—55
M 108 12-8 (௫ 100)

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

---

இல. 11512

யாழ்ப்பாணம் மானிப்பாய்
சரவணமுத்து நாகலிங்கம்
வழக்காளி

யாழ்ப்பாணம் உடுவில்
(1) கதிரவேலு சின்னத்தம்பி
(2) முருகர் சண்முகம்
(3) பெண் சின்னப்பிள்ளை.
எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 11512 ஆம் இலக்க வழக்கில எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் மூன்று துண்டுக்காணிகளை 1955ம் ஆண்டு ஐப்பசி மாதம் எட்டாம் திகதி (8-10-55) சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று முறையே பிரசித்த ஏலத்தில் என்னல் விற்கப்படும.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபாய் 4524 96 உம் இதில் ரூபாய் 4110/— க்கு 11-8-54 தொடக்கம் 14-12 54 திகதி வரைக்கும் 100க்கு 8 வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் இறுபடும் வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 229 - 39 சதமும்,

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம வடக்குப் பகுதி உடுவில் கோவில்பற்று உடுவிலிறை —

1. "கமலவோடை அல்லது கமலவோடையும் போயிட்டியும்" கில. பா. (10) பத்து எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு முருகேசர் முத்துத்தம்பியினுதனமும் கிணறும், மேறகு வாய்க்காலும் கிணறும் இளையவன் சின்னவனுக்கும் கந்தன் கதிரனுக்குமுரிய ஆதனமும் 4 முழ அகலங்கொண்ட ஒழுங்கை முகப்பும், தெற்கு நன்னி வயித்தியினுதனம். இவ்வெல்லைகளுக்குட்பட்ட காணியடங்கலும். மேற்குறித்த கிணற்றுப் பங்கும் கிணற்றின் தென்புறத்தூர்வையில் நிற்கும் தென்னை மாமிரண்டும் முருகேசர் முத்துத்தம்பினது காணிக்குரிய இறைப்பு முறை நாளில் சாயங்காலம் 4 மணிக்கு மேல் ஷை கிணற்றிலிறைத்துக் கொள்ளுமுரித்தும் கிணற்றுப் பாவிப்புக்கான தூர்வை வழிவய்க்கால் பாவிப்புரித்தும்

முற்பதிவு H 231/183,

2. ஷையிறை "நாயுருவி" கில பா, (13 5/8) பதின்மூன்றரையே யரைக்காலும இக் காணியிலிருக்கும் கிணறறின் பகும் தூர்வையில் நிறகும் தென்னை ஒன்றும், கமுகுகளும் எல்லைகிழக்கு பூதர் கணபதிப்பிள்ளையினுரிமைக்காரருக்கும், சங்கரப்பிள்ளை செலலப்பாவினுரிமைக்காரருக்குமுரிய ஆதனங்கள். வடக்கு ஒழுங்கை முகப்பும் குட்டிப்பிள்ளை சுப்பையாவினுரிமைக்காரருக்குரிய ஆதனமும. மேறகுந் தெற்கும் அருமைத்துரை பெண் மஙகளமணியினுதனம். இவ்வெல்லைகளுக்குட்பட்ட காணியடங்கலுமிதற்குட்பட்ட லவைகளிதைச் சேர்ந்தவைகளிலும் வடகிழக்கு மூலையிருந்து வடபுறமாய் வடக்குப் பக்கத்திற் சந்திக்கிற பேரொழுங்கை முகப்புவரைக்குமுள்ள அரைப்பரப்பு விசாலங்கொண்ட ஒழுங்கைப் பாவிப்புரித்திலும் சொரியலாக 2 ஆம் 3 ஆம் பெயர்களுக்குரிய ½) அரைவாசியும். முற்பதிப்பு H. 209/274

3. ஷையிறை "கொட்டையடி" கில. பா. (2) இரண்டும வான் செய்பயிர்கள், பனைகளும், எல்லை கிழக்கும் வடக்கும கணபதி சுதாத்தினுதனம். மேற்கு முத்தன் பெண் வள்ளியினுதனம். தெற்கு ஒழுஙகை. இவ் வெல்லைகளுக்குட்பட்ட காணியடங்கலுமிதறகுட்பட்டவைகளிதைச் சேர்ந்தவைகளும். மேறகெல்லைக் காணியின் வடக்குப் புறமாக இருக்குங் கிணற்றிவிதற்குரியதண்ணீர்ப்பங்கும். தெற்கொழுங்கையால் குறித்தகிணற்றுக்குப் போக்குவரவசெய்யு முரித்தும். முற்பதிப்பு H 231/180+184.

தா. செல்லையா
கொமிஷனரும்,
வெந்திஸ் மேஸ்தரும்,
No 37 Colombogam Road,
Chundikuli, Jaffna 8-8-55
M 106 12-8 (௫ 300)

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

1 கொச்குவில் சுப்பையா மயில்வாகனமும்
2 ஷை பெண் ஞானறஞ்சிதமும்
வழக்காளிகள்

இல 11906

எதிராக

சுதுமலை ஆறுமுகம் பொன்னம்பலம்
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 11905 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப் படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1955 ஹு புரட்டாதி மீ 22 உ வியாழக்கிழமை பிற்பகல் 4-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிகுளிக் கோயிற்பற்று சிவியாதெரு இறை 'புளியடியிற்புலம்' கி பரப்ப 8 ஆறுல ஆட்சிப்படியுக் அளவுப்படியும் 8 3/4 பரப்பும் வீடும் கிணறும் பனைகளும் தென்னை மாமும் மற்றும் வான்பயிர் செய்பயிர்களும் இதில் கிந்தமாக வடக்குப் பக்கமாக 4¼ பரப்பும அதைச் சேர்ந்தவைகளும எல்லை கிழக்கு றேட்டு வடக்கு டாக்குத்தர் St யோண் புவிராசசிங்கத்தினுடைய வாதனம் மேற்கும் தெற்கும் நாகமுத்து இராசரெத்தினத்துக்குடையவாதனம, இக்காணி D 215/177ம் புத்தகத்தில பதியப்பட்டிருக்கிறது.

இரு துண்டுக்காணிகள் 1955 ம் ஹு புரட்டாதி மீ 24 உ சனிக்கிழமை முற்பகல 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணிகள்விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக பூனகரிப்பகுதி மட்டுவில் நாடு "கணவாய்ப்பன்னம்" 32 ஏக்கர் இதில் கிந்தமாக கிழக்குப் பக்கமாக 24 ஏக்கர் அத்துடன வருகளாவும், வீடும் கொட்டிலும் தரவும பயிர்வகைகளும் எல்லை கிழக்கு முசிவபாதசுந்தரம் பெண் செலவரத்தினத்துக்குடைய ஆதனம் வடக்கு முடிக்குரியவாதனம் மேறகு வல்லிபுரம் சுப்பையாவுக்கு விலைப்பட்ட இக்காணியில் ஒரு பகுதி, தெற்கு ஆறுமுகம தம்பையாவினுதனமும் மறுபேருக்குமுடைய வாதனமும், இக்காணி G 28/240 ம் இலக்கப் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கிறது.

2 ஷை மட்டுவில்நாடு இறை "1" எனனும் அட்சாமிட்ட P P A 1413 என்ற துண்டுக் காணி ஏக்கர் 1, றூட் 1 பேட்சு 6.02 ம் இதர்கெல்லை கிழக்கு முடிக்குரிய வாதனம் வடக்கு பூனகரி சககுப்பிட்டி றேட்டு மேற்கு முடிக்குரிய காணி தெற்கு மேற்சொலலிய 2-ம் காணி இக்காணி G 28/241 ம் புத்தகத்திலே பதியப்பட்டிருக்கின்றது.

இக்காணிகளைப்பற்றி ஏதாகுதல் விபரம் அறிகிறதாயிருந்தால் பிறக்டர் க. செ சோமசேகரம் அவர்களிடம் அறிந்துகொள்ளலாம்.

செ. இரத்தினசபாபதி
கொமமிஷனர்
6—8—55.
M 103 12-8-55. (௫ 200)

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

---

யாழ்பபாணம் டிஸ்திறிக் கோட்டில்
உரும்பராய்
1 சின்னத்தம்பி சிவப்பிரகாசமும் பெண்
2 பஞ்சாட்சரமும்
வழக்காளிகள்

இல 10514

எதிராக

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கு நாவாந்துறை றேட்
1 காதி முகமது முகிதீன கைம் பெண் முகமதுஉம்முகுல்தும்
2 முகமது மீராசாகிப்பு முகமது சுலதான் அப்துல் காதரும் பெண்
3 சுலைகா உம்மாவும் மானிப்பாய் சுதுமலை
4 ஆறுமுகம் நாகராசா
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின 10514-ம் இலக்க வழக்கில எனக்குக கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும ஓர் துண்டுக்காணி 1955-ம் ஹு புரட்டாதி மீ 22உ வியாழக்கிழமை முறபகல 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில விற்கப்படும்.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை மேற்கிறை"பம்மை வெளியும் புளியடியும்" பரகில 2 7/8 பகுதும இது D 49/354 ல் பதியப்பட்டுள்ளது இதில் கிழக்குப் பக்கமாக பரகி இ 1 7/16 பகுதும்வீடும் குசினியும, மாலும கிணறும, செய்பயிர் வான்பயிர்களுல் எல்லை கிழக்கு முகமது மீரா சாகிப்பு பெண் முகமது மீரா நாச்சியாவின உரிமைக்காரரின ஆதனம், வடக்கு சந்திபா பெண் திசம்வாவின ஆதனம், மேற்கு இக்காணியின் மீதியாயுள்ள அரைவாசிப்பாகம. தெறகு நாவாந்துறை றேட் இது D 188/128 ல பதியபபட்டிருக்கிறது.

S. Ratnasabapathy,
Commissioner of Sales
Jaffna.
8-8 55
M 104 12-8 (௫ 200)

---

## நிலையில்லா முதல் மந்திரி பதவி

---

பாக்கிஸ்தான் முதல் மந்திரிப் பதவி பற்றிப் பல செய்திகள் வெளிவந்தன. ஸ்ரீ முகம்மது அலியின் இடத்தல் ஸ்ரீ ஹுசைன் ஷஹீத் ஸுஹ்ரவர்த்தி வரக்கூடுமென்று மற்றொரு செய்தி கூறுகின்றது. ஸ்ரீ டட்லி சேனநாயகவை மீண்டும் முதல் மந்திரியாக்க வேண்டும் என பாராளுமன்றத்திற் கூறிகிறகின்றூர் எங்கள் பிரதிநிதி ஒருவர்.

---

## வலிகாமம் வடக்கு தமிழாசிரியர் சங்க அறிவித்தல்


### பண்டித, பாலபண்டித, பிரவேச வருப்புகள்

இச் சங்கத்தின் ஆதரவில் பண்டித, பாலபண்டித, பிரவேச வகுப்புகள் இம்மாத முடிவில் மல்லாகத்தில் ஆரம்பித்து நடாத்தப்படும். அநுபவம் வாய்ந்த வித்துவான்கள் பண்டிதர்கள் ஆசிரியர்களாக வகுப்புகளை நடாத்துவார்கள் இவ் வகுப்புகளில் சேர்ந்து படிக்க விரும்புவோர் 23—8—55 க்கு முன்பு ஷை சங்கக் காரியதரிசிக்கு விண்ணப்பித்துக்கொள்ளர்பாலர்.

ஆங்கிலம் கற்போருக்காக G C E. உயர்தர வகுப்பும் B A. வகுப்பும் இச்சங்கத்தால் நடாத்தப்பட்டு வருகின்றன. முன்னைய வகுப்பில் சென்ற ஆண்டு பலர் தேர்ச்சியுற்றமை குறிப்பிடக்கூடியது. இவற்றில் சேர்ந்து படிப்பவர்களும மனுச் செய்து கொள்ளலாம்.

காரியதரிசி
வலி. வடக்கு, த. ஆ. சங்கம்

மல்லாகம்.




வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. Lond residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai. Jaffna, at their Press, the Saiva Prakasa Press. Vannarpannai. Jaffna on Friday August, 12 1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org